<u>பத்திரிக்கைச் செய்தி</u>

இன்று 18.02.2019 இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்கள் உத்தரவின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப்பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து சார்பதிவாளர் அலுவலகம், அசோக் நகர், சென்னை அவர்கள் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,88,900/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

இன்று 18.02.2019 இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்கள் உத்தரவின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப்பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து சார்பதிவாளர் அலுவலகம், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.75,000/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

இன்று 18.02.2019 திரு.ஜெய்சங்கர், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி அலுவலகத்தை அணுகி உர மானியம் பெற திரு.ராமச்சந்திரன், செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரை தொடர்பு கொண்டபோது தனக்கு கையூட்டாக ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ராமச்சந்திரன், செயலாளர் புகார்தாரர் திரு.ஜெய்சங்கர், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ.5,000/- கையூட்டாக வாங்கும்போது கையும் களவுமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

இன்று 18.02.2019 திரு.சக்திவேல், த/பெ முத்துச்சாமி கவுண்டர், சிக்கரசன்பாளையம், ஈரோடு மாவட்டம் என்பவர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஈரோடு அலுவலகத்தை அணுகி சர்வே எண்ணின் உட்பிரிவை ரத்து செய்தல் மற்றும் திருத்தம் செய்ய திரு.கே.ரங்கசாமி, அ2 உதவியாளர், கோட்டாச்சியர் அலுவலகம், கோபி செட்டிப்பாளையம், ஈரோடு மாவட்டம் என்பவரை தொடர்பு கொண்டபோது தனக்கு கையூட்டாக ரூ.65,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது அ2 உதவியாளர், கோட்டாச்சியர் அலுவலகம், கோபி செட்டிப்பாளையம், ஈரோடு மாவட்டம் திரு.கே.ரங்கசாமி, புகார்தாரர் திரு.சக்திவேல், த/பெ முத்துச்சாமி கவுண்டர், சிக்கரசன்பாளையம், ஈரோடு மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ.65,000/- கையூட்டாக வாங்கும்போது கையும் களவுமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

இன்று 18.02.2019 திரு.திலோக்சந்தர், த/பெ ரவிச்சந்திரன், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவண்ணாமலை அலுவலகத்தை அணுகி தனது புதிதாக கட்டப்பட்ட திருமண மண்டபத்திற்கு சுகாதார சான்றிதழ் வேண்டி திரு.சுந்தரராஜ், த/பெ ஜேக்கப், நேர்முக உதவியாளர், டெக்னிக்கல், துணை இயக்குநர் அலுவலகம், சுகாதார சேவை மையம், திருண்ணாமலை மாவட்டம் என்பவரை தொடர்பு கொண்டபோது தனக்கு கையூட்டாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது நேர்முக உதவியாளர், டெக்னிக்கல், துணை இயக்குநர் அலுவலகம், சுகாதார சேவை மையம், திருண்ணாமலை மாவட்டம் திரு.சுந்தரராஜ், த/பெ ஜேக்கப், புகார்தாரர் திரு.திலோக்சந்தர், த/பெ ரவிச்சந்திரன் செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ.6,000/- கையூட்டாக வாங்கும்போது கையும் களவுமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.